சுருக்கம்

தமிழ் வளர்ச்சி – நூல்கள் நாட்டுடைமை – தமிழறிஞர் பேராசிரியர் கா.ம.வேங்கடராமையா அவர்களின் நூல்களை நாட்டுடமையாக்கி அவர்களது மரபுரிமையர்களுக்கு பரிவுத்தொகை வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தி (தவ.1–1) துறை

அரசாணை (நிலை) எண்.48

நாள் : 1.2.2011
திருவள்ளுவராண்டு 2042
தை 18
படிக்க:

தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கடித ந.க.எண்.தமிழ் 1/12590/2010, நாள் 19.11.2010.

========

ஆணை

மேலே படிக்கப்பட்ட தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கடிதத்தில், மறைந்த தமிழறிஞர் பேராசிரியர் கா.ம.வேங்கடராமையா அவர்களின் நூல்களை நாட்டுடைமையாக்குமாறு அவரின் மகன்களான பேராசிரியர் ம.வே.பசுபதி, புலவர் வே.மகாதேவன் மற்றும் திரு.ம.வே.சுவாமிநாதன் ஆகியோர் வேண்டியுள்ளார்கள் என்றும், தமிழறிஞர் பேராசிரியர் கா.ம.வேங்கடராமையா அவர்களுக்கு அரசு நிதியுதவி வழங்கக் கருதும் நேர்வில் தமிழ் வளர்ச்சித் துறையில் செயற்படுத்தப்பட்டுவரும் திட்டமான தமிழறிஞர்களின் நூல்களை நாட்டுடைமையாக்கி அவர்தம் மரபுரிமையர்களுக்குப் பரிவுத் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் கருதிப் பார்க்கலாம் என்றும், தமிழறிஞர் பேராசிரியர் கா.ம.வேங்கடராமையா அவர்கள் செங்கல்பட்டு மாவட்டம், சென்னைக்கு அருகிலுள்ள போரூருக்கு பக்கத்தில் காரம்பாக்கம் என்ற சிற்றூரில் 4.4.1911–இல் தோன்றி, 31.1.1994–இல் மறைந்தார் என்றும், இவர் உயர்நிலைப் பள்ளி தமிழாசிரியராகவும், திருப்பனந்தாள் சுவாமிநாத சுவாமிகள் செந்தமிழ்க் கல்லூரியில் முதல்வராகவும், 'தமிழ், சமஸ்கிருதம் மற்றும் பிற மொழிகள் ஆராய்ச்சி' நிலையத்தில் ஆய்வாளராகவும், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் திருக்குறள் இருக்கையில் ஆய்வாளராகவும், தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் அரிய கையெழுத்து சுவடிப் புலத் தலைவர் மற்றும் பேராசிரியராகவும், திருவனந்தபுரம் பன்னாட்டுத் திராவிட மொழியியல் ஆய்வு நிறுவனத்தில் ஆய்வாளராகவும் பணியாற்றி தமிழ் மொழிக்கு அருந்தொண்டாற்றியவர் என்றும் தெரிவித்துள்ளார்.

2. மேலும், மறைந்த தமிழறிஞர் பேராசிரியர் கா.ம.வேங்கடராமையா அவர்கள் கல்வெட்டாராய்ச்சிப் புலவர், செந்தமிழ் கலாநிதி, தமிழ் மாமணி, சைவத் தமிழ் ஞாயிறு, சிவநெறிச் செல்வர் உள்ளிட்ட பல விருதுகளைப் பெற்றவர் என்றும், இவர் 1. இலக்கிய கேணி, 2. சோழர் கால அரசியல் தலைவர்கள், 3. கல்லெழுத்துக்களில், 4. கல்வெட்டில் தேவார மூவர், 5. Story of Saiva Saints உள்ளிட்ட 19 நூல்களை படைத்து தமிழ் இலக்கியத்திற்கு வளம் சேர்த்துள்ளார் என்றும், இத்தகு பெருமைக்குரிய இவரது நூல்களை நாட்டுடைமையாக்கி அவர்தம் மரபுரிமையர்களுக்கு பரிவுத் தொகை வழங்கப் பெறலாம் என்றும், வழங்கப் பெறும் பரிவுத் தொகையினை அரசு நிலையில் முடிவு செய்யப்படலாம் எனவும் தமிழ் வளர்ச்சி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

3. தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து, அதனை ஏற்று, தமிழறிஞர் பேராசிரியர் கா.ம.வேங்கடராமையா அவர்களின் நூல்கள் அனைத்தையும் நாட்டுடைமையாக்க ஒப்புதல் அளித்து மரபுரிமையர்களுக்கு பரிவுத்தொகையாக ரூ.15,00,000/– (ரூபாய் பதினைந்து இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தும், மேலும், இப்பரிவுத் தொகையினைப் பெறவரும் தமிழறிஞர் பேராசிரியர் கா.ம.வேங்கடராமையா அவர்களின் மரபுரிமையர்கள் சென்னை வந்து செல்ல தேவைப்படும் போக்குவரத்து / ஏனைய செலவினத்தை மேற்கொள்ள ரூ.5,000/– (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தும் அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினை கீழ்க்காணும் கணக்குத் தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

"2202. பொதுக் கல்வி – 05. மொழி வளர்ச்சி – 800. ஏனைய செலவு – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – JE தமிழ் வளர்ச்சிக்கான மானியங்கள், பரிசுகள் முதலியவை – தமிழ் வளர்ச்சி இயக்குநரின் பொறுப்பில் உள்ளவை – 09. உதவித் தொகை – 03. குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை''
(த.தொ.கு.2202 05 800 JE 0933)

– ரூ.15,00,000/–

"2202. பொதுக் கல்வி – 05. மொழி வளர்ச்சி – 800. ஏனைய செலவு – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – JE தமிழ் வளர்ச்சிக்கான மானியங்கள், பரிசுகள் முதலியவை – தமிழ் வளர்ச்சி இயக்குநரின் பொறுப்பில் உள்ளவை – 05. அலுவலகச் செலவுகள் – 02. ஏனைய சில்லறைச் செலவுகள்"
(த.தொ.கு.2202 05 800 JE 0522)

- ரூ.5,000/–

5. மேலே பத்தி 3–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தினை மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதியொதுக்கம் 2010–2011–ஆம் ஆண்டிற்கான இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இருப்பினும் மேற்கண்ட செலவினத்திற்கு 2010–11–ம் ஆண்டிற்கான இறுதி

துணை மதிப்பீடுகளில் கொணர்ந்து சட்ட மன்றப் பேரவையில் ஒப்புதல் பின்னர் பெறப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி, மேலே பத்தி 3–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தைப் பெற்று வழங்கிட இயக்குநர், தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை–8 அவர்களுக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது. மேலும், பத்தி 3–இல் அனுமதிக்கப்பட்ட இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2010–2011–ஆம் ஆண்டிற்கான இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதி (து.வ. அநி (ம) செ) துறைக்கு அனுப்பும்படி இயக்குநர், தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை–8 அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

6. மேலே பத்தி 3–இல் ஒப்பளிக்கப்பட்ட பரிவுத்தொகை மற்றும் சில்லறைச் செலவினத் தொகையை தமிழ்நாடு நிதி விதித் தொகுப்பு தொகுதி 1 பிரிவுக்கூறு 99–இன் கீழ், முன்பணமாகப் பெறவும், மேற்குறிப்பிட்டுள்ள செலவினங்களை மேற்கொள்ளவும் உரிய பற்றுச்சீட்டுகள் மூலம் முன்பணத் தொகைக்கான பட்டியலை நேர் செய்யவும் தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு அரசு அனுமதி அளிக்கிறது.

7. வருவாய்த் துறையினரின் மரபுரிமையர் சான்றுகளின் அடிப்படையில் உரிய மரபுரிமையர்களுக்கு மேற்கண்ட தொகையை பகிர்ந்தளிக்க தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு அனுமதியளிக்கப்படுகிறது.

8. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண்.17/நிதி(துவஅநி(ம)செ)/2011, நாள்.1.2.2011 –இல் பெற்ற இசைவு மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.1941 (ஆயிரத்து தொள்ளாயிரத்து நாற்பத்து ஒன்று)உடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ரா.சிவகுமார்
அரசுச் செயலாளர்

<u>பெறுநர்</u>
இயக்குநர், தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை–8.
தமிழறிஞர் பேராசிரியர் கா.ம.வேங்கடராமையா அவர்களின் மரபுரிமையர்கள்
(தமிழ் வளர்ச்சி இயக்ககம் மூலம்)
சம்பளக் கணக்கு அலுவலர்(வடக்கு), சென்னை–1.
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை–18/35.
<u>நகல்</u>
முதலமைச்சரின் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு நிதியமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
நிதி (து.வ.அநி (ம) செ./ வ.செ.பொ I/ வ.செ.பொ II)துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

01.02.2011
(த. மகாலட்சுமி)
அரசு சார்புச் செயலாளர்.

1.2.11